**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8075299

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : Coimbatore   PS: காவல்நிலையம் V & AC   Year: ஆண்டு 2021   FIR No.: மு.த.அ. எண் 6/2021/AC/CB   Date: நாள் 11.02.2021
2. (i) Act சட்டம்: The PC Act, 1988 as amended   Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: by the PC (Amendment) Act, 2018.   Sections பிரிவுகள்: 7(b)
   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from நாள் முதல் : 10.02.2021   Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு   Time from நேரம் முதல் : 18.30hrs   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.02.2021   Time நேரம் : 09.30hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD-Vol-I   Time நேரம் : 09.30hrs
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் about 16 km South East.
   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி O/o. Survey Section Coimbatore City Municipal Corporation East zone, Coimbatore
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. Nagarajan   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Periyannan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 62/2021   (d) Nationality : நாட்டினம் Indian   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Rtd TNSTC Conductor   (g) Address : முகவரி Door No. 50, Sungam Mythanam, Irugur Road, Ondipudur, Coimbatore.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) Tr. Nirmalkumar, Surveyor, o/o. Coimbatore City Municipal Corporation East zone Survey Section, Coimbatore
   (2) Tr. Natarajan, Assistant -do-
8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheets Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

P. Nagaraj 11/02/2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

R. [signature] 11/02/2021

15. Date & Time of despatch to the court: 11.02.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. ...
Rank: நிலை ...................... No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு
கோவை. 11.02.2021

சமர்ப்பிக்கப்படுகிறது:

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 6/2021/ AC/CB, u/s. 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**

11.02.2021-ம் தேதி வியாழக்கிழமை காலை 09.30 மணிக்கு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபொழுது கதவு எண். 50, சுங்கம் மைதானம், இருகூர் ரோடு, ஒண்டிபுதூர், கோயமுத்தூர் என்ற முகவரியில் குடியிருந்து வரும் பெரியண்ணன் என்பவரின் மகன் திரு.P.நாகராஜன் என்பவர் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகார் மனுவை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார் சம்பந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில், கோயம்புத்தூர் மாநகராட்சியின் நில அளவை பிரிவில் சர்வேயராக பணிபுரியும் திரு.நிர்மல்குமார் என்பவர் அவரது உதவியாளர் திரு.நடராஜ் என்பவரின் மூலம் வாதியின் மனைவி சுமதி என்பவரின் பெயரில் பட்டா மாறுதல் செய்யவேண்டி கொடுக்கப்பட்டிருந்த மூன்று விண்ணங்களை பரிந்துரை செய்து கொடுத்ததற்காக லஞ்சமாக பணம் கேட்டது தெரியவந்தது. மேற்படி புகாரின் அடிப்படையில் எதிரிகளின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 11.02.2021-ம் தேதி 10.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.6/2021/AC/CB, u/s.7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன் படி மேற்படி எதிரிகள் கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலகத்தில்

சர்வேயராக பணிபுரியும் திரு.நிர்மல்குமார் மற்றும் அவரது உதவியாளர் திரு.நடராஜ் ஆகியோர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் P.நாகராஜன், வயது 62, த/பெ.பெரியண்ணன், கதவு எண். 50, சுங்கம் மைதானம் இருகூர் ரோடு, ஒண்டிபுதூர், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, கோயம்புத்தூர். அய்யா, நான் கோயம்புத்தூர் மாவட்டம், இருகூர் ரோடு, ஒண்டிபுதூர், கதவு எண் 50 சுங்கம் மைதானம் என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் எனது மனைவி சுமதி பெயரில் ஒண்டிபுதூரைச் சேர்ந்த ஜெயராஜ் என்பவரின் மகன் அழகர்சங்கர் மற்றும் அவரது மனைவி கவிதா ஆகியோரிடமிருந்து சிங்காநல்லூர் கிராமத்தில் க.ச.எண்.142-ல் சுமார் 1040 சதுரடி கொண்ட வீட்டை 18.06.2015-ம் தேதி சிங்காநல்லூர் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் 5719/2015-ன்படி கிரையம் பெற்றேன். பின்னர் எனது மனைவி சுமதி பெயரில் ஒண்டிபுதூரைச் சேர்ந்த காஜீசெட்டியார் என்பவரின் மகன் சுப்பிரமணியம் என்பவரிடமிருந்து சிங்காநல்லூர் கிராமத்தில் க.ச.எண். 142-ல் சுமார் 746 சதுரடி கொண்ட வீட்டை 22.01.2018-ம் தேதி சிங்காநல்லூர் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண். 618/2018-ன்படி கிரையம் பெற்றேன். எனது மனைவி சுமதி பெயரில் ஒண்டிபுதூரைச் சேர்ந்த வேலுசாமி என்பவரின் மகன் ரூத்ரமூர்த்தி மற்றும் அவரது மனைவி மலர்கொடி ஆகியோரிடமிருந்து சிங்காநல்லூர் கிராமத்தில் க.ச.எண்.142-ல் சுமார் 42 சதுரடி கொண்ட இடத்தை கடந்த 21.05.2020-ம் தேதி சிங்காநல்லூர் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் 3673/2020-ன்படி கிரையம் பெற்றேன். நான் எனது மனைவி பெயரில் வாங்கிய 3 இடங்களையும் சேர்த்து அதில் வீடு கட்டுவதற்காக வங்கியில் கடன் பெறுவதற்காக விசாரித்த போது அவர்கள் எனது மனைவி பெயரில் பட்டா இருந்தால் மட்டுமே கடன் பெற முடியும் என்று சொன்னார்கள். அதனால் நான் மேற்படி 3 இடங்களுக்கும் எனது மனைவி பெயரில் பட்டா பெயர் மாறுதல் செய்ய வேண்டி சிங்காநல்லூரில் உள்ள கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலகத்தில் 03.11.2020-ம் தேதி காலையில் சர்வே செக்சன் சென்று 3 தனித்தனி பட்டா பெயர் மாறுதல் செய்ய வேண்டி மனுக்களை உரிய ஆவணங்களை இணைத்து கொடுத்த போது சர்வே செக்சனில் இருந்த அலுவலர் கோயம்புத்தூர் தெற்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று சீல் வைத்து வாங்கி வர சொன்னார். அதன்படி

அன்றைய தேதியில் நான் தெற்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று 3 மனுக்களிலும் சீல் வைத்துவிட்டு கோவை மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலகத்தில் சர்வே செக்சனில் இருந்த அலுவலரிடம் 3 மனுக்களையும் கொடுத்தேன். அதனை தொடர்ந்து நான் கிழக்கு மண்டல அலுவலகம் சென்று சர்வே செக்சனில் எனது மனுக்களை பார்த்து வந்த அப்போதைய சர்வேயர் விஜயகுமார் அவர்களை பார்த்து எனது மனுவின் மீதான நடவடிக்கை குறித்து விசாரித்து வந்தேன். அவர் மாறுதலில் சென்றதனால் தற்போதைய சர்வேயர் நிர்மல்குமார் அவர்களையும் பார்த்து எனது மனுவின் மீதான நடவடிக்கை குறித்து விசாரித்து வந்தேன். அவர் காலதாமதப்படுத்தி வந்தார். எனது மனு சம்பந்தமாக காலதாமதப்படுத்தி வந்ததால் நான் கடந்த ஜனவரி மாதத்தில் கோவை மாநகராட்சி ஆணையர் அலுவலகம் சென்றபோது அவர் பிசியாக இருந்ததால் அவருடைய பி.சியின் செல்போன் எண் 9443799222 என்ற எண்ணுக்கு தொடர்புகொண்டு நிலுவையிலிருந்த எனது பட்டா பெயர் மாறுதல் விபரத்தை தெரிவித்தபோது அவர் மீண்டும் என்னை தொடர்பு கொள்வதாக கூறினார். பின்னர் என்னை மீண்டும் செல்போனில் தொடர்புகொண்டு அவர் கிழக்கு மண்டல உதவி ஆணையர் திரு.முருகன் என்பவரிடம் பேசிவிட்டதாகவும் என்னை போய் அவரை நேரில் சந்திக்கும்படியும் கூறினார். அதன்படி நான் கிழக்கு மண்டல அலுவலகத்திற்கு சென்று உதவி ஆணையர் திரு.முருகன் அவர்களை நேரில் சந்தித்த போது அவர் சர்வேயர் நிர்மல்குமார் அவர்களை அழைத்து இவர் மனு சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கும்படி கூறினார். அதன்பின்பும் சர்வேயர் நிர்மல்குமார் எனது மனு மீது நடவடிக்கை எடுக்கவில்லை. கடந்த வாரம் கிழக்கு மண்டல அலுவலகம் வந்து சர்வேயர் நிர்மல்குமார் அவர்களை சந்தித்து போது தான் தேர்தல் வேலையில் இருப்பதால் 2 நாட்கள் கழித்து வருமாறு சொன்னார். 10.02.2021-ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு கிழக்கு மண்டல அலுவலகம் சென்று சர்வேயர் நிர்மல்குமார் அவர்களை பார்த்து எனது மனு சம்பந்தமாக கேட்ட போது அவர் 2 நாட்கள் கழித்து வர சொன்னார். அதற்கு நான் மனு கொடுத்து இவ்வளவு நாட்களாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கேட்டேன். அதற்கு அவர் அன்று மாலை அலுவலகம் வந்து பார்க்க சொன்னார். அதற்கு நான் மாலையில் வந்து பார்ப்பதாக சொல்லிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். பின்னர் நான் 10.02.2021-ம் தேதி மாலை சுமார் 6.30 மணியளவில் கிழக்கு மண்டல அலுவலகம் சென்று சர்வேயர் நிர்மல்குமார் அவர்களை சந்திக்க சென்றேன். அப்போது அவர்

அலுவலகத்தில் இல்லாதால் அங்கிருந்து வெளியே வந்து எனது செல்போன் எண் 96002 91113 -லிருந்து சர்வேயர் நிர்மல்குமார் அவர்களது செல்போன் எண் 9842716828-க்கு தொடர்பு கொண்டு பேசிய போது நான் உங்கள் பைலை ரெடி செய்து வைத்துள்ளேன், நீங்கள் எனது உதவியாளர் நடராஜனை போய் பாருங்கள் அவரிடம் எல்லா பார்மாலட்டியையும் சொல்லி இருக்கேன் என்று சொன்னார். அதன்படி நான் அந்த அலுவலகத்தில் விசாரித்து சர்வே பிரிவில் இருந்த நடராஜ் என்பவரை பார்த்து மேற்படி விபரத்தை தெரிவித்தேன். அவர் என்னை சர்வேயர் நிர்மல்குமாருக்கு போன் செய்யும்படி சொன்னர். உடனே நான் எனது செல்போனில் சர்வேயர் நிர்மல்குமார் அவர்களை தொடர்பு கொண்டு பட்டா பெயர் மாறுதல் விபரம் சொல்லி உதவியாளர் நடராஜ் அவர்களிடம் எனது போனை கொடுத்தேன். அவர் போனில் பேசிய போது மறுமுனையில் சர்வேயர் நிர்மல்குமாரிடம் சரிங்க சார், சரிங்க சார் என்றும் சார் சொன்னமாதிரியே ரூ.6,000/-ஐ வாங்கிக்கொள்கிறேன் சார் என்று பேசிவிட்டு போனை கட்செய்தவுடன், எனது மனைவின் பெயருக்கு பட்டா பெயர் மாறுதல் செய்ய சர்வேயர் பரிந்துரைத்துவிட்டதாகவும், மேற்படி பைல்களை எடுத்துகொடுத்துவிட்டு 3 பைலுக்கும் சேர்த்து ரூ.6,000/- வாங்கிகொண்டு பைலை கொடுக்க சொல்லி சர்வேயர் சொன்னதாகவும் என்னிடம் சொன்னார். அதற்கு நான் அப்போது பணம் கொண்டு வரவில்லை என்று சொன்னேன். அதற்கு உதவியாளர் நடராஜ் பணம் வாங்கி விட்டுதான் பைலை கொடுக்கும்படி சர்வேயர் சொல்லியுள்ளதாகவும், நீங்கள் பணம் கொடுக்கவில்லை என்றால் சர்வேயர் என் மீது சந்தேகப்படுவார் என்றும், பணம் கொடுத்துவிட்டு போகும்படியும் கட்டாயப்படுத்தினார். நான் பணம் கொடுக்காததால் அவர் சர்வேயரிடம் கேட்டுவிட்டு பின்னர் பைல்களை தருவதாக சொல்லி, அவரது செல்போனிலிருந்து சர்வேயருக்கு போன் செய்து நான் பணம் கொண்டுவராத விபரத்தை பேசிவிட்டு பின்னர் என்னிடம் போனை கொடுத்தார். நான் பணம் கொண்டுவரவில்லை என்ற விபரத்தை சர்வேயரிடம் சொன்னபோது அவர் பட்டா பெயர் மாறுதல் செய்வது சம்மந்தமான எனது 3 பைல்களின் மீதான வேலையை முடித்து கொடுத்ததற்காக பணம் ரூ.6000/- கொடுத்துவிட்டு செல்லுங்கள் என்று சொன்னார். அதற்கு நான் பணம் கொண்டுவரவில்லை என்று சொன்னபோது சர்வேயர் என்னிடம் தற்போது பைல்களை வாங்கிக்கொள்ளுங்கள் ஆனால் நாளை கண்டிப்பாக பணத்தை கொண்டு வந்து நடராஜிடம் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லிவிட்டு செல்போனை

நடராஜனிடம் கொடுக்கசொன்னார். நானும் கொடுத்தேன் அப்போது நடராஜ் அவரிடம் பேசிவிட்டு போனை கட்செய்துவிட்டார். அதன்பின்னர் நடராஜ் எனது மனைவியின் பெயரில் பட்டா மாறுதல் கொடுப்பதற்காக பரிதுரைக்கடிதம் இணைக்கப்பட்ட 3 பைல்களையும் என்னிடம் கொடுத்துவிட்டு, அவற்றை நான் பெற்றுக்கொண்டதற்காக அவர்களது அலுவலக கோப்பில் என்னிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டு சர்வேயர் சொன்னபடி நாளை பணம் ரூ.6000/- கொண்டுவந்து என்னிடம் கொடுங்கள் என்று சொன்னார். எனது மனைவி பெயரில் பட்டா மாறுதல் செய்ய பரிந்துரை செய்தாலும், மேலும் நான் மீண்டும் அதே அலுவலகத்திற்கு TSLR வாங்க செல்ல வேண்டியுள்ளதாலும் அப்போதைக்கு நான் பணம் கொடுப்பதாக சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்தேன். நான் யோசித்து பார்த்ததில் எனது மனைவி பெயரில் பட்டா பெயர் மாறுதலுக்கு பரிந்துரை செய்து கொடுத்ததற்கு லஞ்சமாக பணம் ரூ.6000/-ஐ கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே எனது மனைவி பெயரில் பட்டா பெயர் மாறுதலுக்கு பரிந்துரை செய்து கொடுத்ததற்கு லஞ்சமாக பணம் ரூ.6000/-ஐ கேட்கும் சர்வேயர் நிர்மல்குமார் மற்றும் அவரது உதவியாளர் நடராஜ் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு sd/-(xxxx) 11/02/2021 இடம்: கோவை நாள் : 11.02.2021 Sir, Received the complaint on 11.02.2021 at about 09.30hrs sd/-(xxxx) 11.02.2021 (R.Ezhilarasi), Inspr. of Police, V&AC, Coimbatore. Sir, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.6/2021/AC/CB u/s.7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 11.02.2021 at 10.00hrs sd/-(xxxx) 11.02.2021 (R.Ezhilarasi), Inspr. of Police, V&AC, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

11/02/2021

(R. எழிலரசி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.